நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு
முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம் நாள் சனிக்கிழமை
(2057 திருவள்ளுவராண்டு, பராபவ வருடம், சித்திரை மாதம் 05–ம் நாள்)

**C.M.P.No. 230/2026**

சு.தர்மலிங்கம் (வயது 45),
த/பெ. சுப்பிரமணி,
46, பாரதி நகர்,
பெரியசேமூர்,
வீரப்பன்சத்திரம்,
ஈரோடு–638004 …… மனுதாரர்

/எதிர்/

1. காவல் கண்காணிப்பாளர்,
மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
ஈரோடு.

2. காவல் ஆய்வாளர்,
வடக்கு காவல் நிலையம்,
ஈரோடு. …… எதிர்மனுதாரர்கள்

/எதிர்/

1. சத்தியபரதன் (வயது 48),
த/பெ. மூக்கன்,
1/1, கல்லேரி காலனி,
முத்தூர் அஞ்சல்,
காங்கேயம் தாலூக்கா,
திருப்பூர் மாவட்டம் – 638 105

2. தேவிலட்சுமி (வயது 42),
க/பெ. முருகேசன்,
பா/பெ. கலைசெல்வி,
சத்தியமூர்த்தி நகர்,
ஜம்பை, பவானி தாலூக்கா,
ஈரோடு மாவட்டம்.

3. முருகேசன் (வயது 50),
த/பெ. வீரன்,
59, பொரசமேட்டுப் புதூர்,
சிவகிரி அஞ்சல்,
கொடுமுடி (தாலூக்கா),
ஈரோடு மாவட்டம். …… 1 முதல் 3 எதிரிகள்

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:45:35 +0530

இம்மனு 06.04.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் திரு.S.முகமது ஷெரிப் வழக்கறிஞர் ஆஜராகியும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், வாதுரைகள் கேட்கப்பட்டும், இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனு BNSS பிரிவு 175(3)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**I. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், வீரப்பன்சத்திரம், பெரியசேமூர், பாரதி நகர், கதவு எண்.46 என்ற முகவரியில் கடந்த 30 ஆண்டுகளாக வசித்து வருகிறார் என்றும், கடந்த முறை நடந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் வேட்பாளராக போட்டியிட்டு தோல்வி அடைந்தாலும், கடந்த 5 ஆண்டுகளாக சமூக பணிகள் செய்து கொண்டு, சமூக சேவையில் மனுதாரர் ஈடுபட்டு வருகிறார் என்றும், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு மனுதாரருக்கு திருப்பூர் மாவட்டம் காங்கேயம் தாலுக்கா, முத்தூர் கல்லேரி காலனியை சேர்ந்த கதவு எண் 1/1–ல் வசித்து வரும் மூக்கன் என்பவரின் சுமார் 48 வயதுள்ள மகன் சத்தியபரதன்–1, ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், ஜம்பை, சத்தியமூர்த்தி நகரில் கதவு எண் 19–ல் குடியிருந்து வரும் முருகேசன் அவரின் மனைவி சுமார் 42 வயதுள்ள தேவிலட்சுமி–2 மற்றும் கொடுமுடி தாலுக்கா, சிவகிரி அருகில் உள்ள பொரசமேட்டுப் புதூரை சேர்ந்த சுமார் 50 வயதுள்ள முருகேசன்–3 என்பவர்கள் தாங்களும் சமூக சேவைகள் செய்து, மக்களுக்கு நல்லது செய்து உதவி வருவதாக பொய்யாக கூறி அறிமுகம் ஆகி மனுதாரரிடம் பழக்க வழக்கத்தை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றும், மேற்படி நபர்கள் இம்மனுவில் 1 முதல் 3 எதிரிகள் என்றும், ஆனால் அவர்கள் உண்மையாக என்ன தொழில் செய்து வருகிறார்கள் என்பது மனுதாரருக்கு தெரியாது என்றும், மனுதாரர் கேட்ட போதும் கூட சமூக சேவைகள் தான் என்று கூறி வந்துள்ளனர் என்றும், மேலும் மனுதாரரிடம் அவ்வப்போது தொடர்பு கொண்டு அடிக்கடி பேசி வந்துள்ளார்கள்.

இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு மே, ஜூன் மாதங்களிலிருந்தே 1 முதல் 3 எதிரிகள் மனுதாரரை தானாக முன்வந்து அணுகி 1 முதல் 3 எதிரிகள் அவர்களிடம் அதிக தங்க நகைகள் இருப்பதாகவும், அதை குறைந்த விலைக்கு தருவதாகவும் கூறியதற்கு மனுதாரர் மறுப்பு தெரிவித்து வேண்டாம் என்று

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:45:41 +0530

கூறி அவர்களின் அணுகு முறையை தவிர்த்து வந்துள்ளார் என்றும், மேலும் அவர்களும் மனுதாரரிடம் சமூக சேவைகளில் ஈடுபட்டு வாழ வழி இல்லாத ஏழை மக்களுக்கு சமூக சேவையாக, அதை இலவசமாக நலத்தொண்டு உதவிகள் செய்து வருவதாக பொய்யாக கூறி மனுதாரரை மூளை சலவை செய்து ஏமாற்றி, 1 முதல் 3 எதிரிகள் அவர்களின் தேவைக்கிணங்க, அவ்வப்போது மனுதாரரிடம் சிறிய அளவில் பணம் வாங்குவதும், அதை திருப்பி கொடுப்பதுமாக இருந்து மனுதாரருக்கு நம்பிக்கை கொடுத்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த 01.07.2025 அன்று 1 முதல் 3 எதிரிகள், மனுதாரரை அணுகி ஏழை மக்களுக்கு சில அத்தியாவசிய பொருட்கள் வாங்க பணம் அவசரமாக தேவைப்படுவதாகவும், தங்களிடம் பணம் உள்ளது ஆனால் போதவில்லை என்றும், அதில் ரூ.60,000/- குறைவாக உள்ளது என்றும், பணம் கிடைக்குமா என்றும் கோரி பணம் கேட்டதற்கு மனுதாரர் பணம் இல்லை என்று கூறி மறுக்க, அதற்கு 1 முதல் 3 எதிரிகள் நீங்கள் சும்மா தர வேண்டாம், தங்களிடம் இருக்கும் 2 மோதிரம் உள்ளது, அது 1 ½ பவுன் ஆகும் என்றும், அந்த நகை, தற்போது மார்கெட் விலையில் ரூ.1,00,000/- மதிப்புள்ள நகை, நீங்கள் அதை வைத்துக்கொண்டு ரூ.60,000/- மட்டும் கொடுங்கள் போதும் என்று வஞ்சகமாக பேசி நம்ப வைத்து உள்ளனர். மனுதாரரும் ஏழை மக்களுக்கு தானே சேவை செய்கிறார்கள் என்று எதிரிகளின் சூழ்ச்சி தெரியாமல், அவர்களின் வஞ்சக வார்த்தையை நம்பி பணத்தை ஏற்பாடு செய்து தருவதாக ஒப்புக்கொள்ள, மேற்படி நபர்கள் சரி என்று கூறி சென்று விட்டு, தினமும் மனுதாரரை தொடர்பு கொண்டு பேசி மனுதாரரை மூளை சலவை செய்து வந்துள்ளனர்.

கடந்த 03.07.2025 அன்று பணம் ரெடியாகி விட்டது என்று மனுதாரர் கூற, 1 முதல் 3 எதிரிகள் பணத்தை எடுத்துக்கொண்டு மாலை 6 மணி சுமாருக்கு ஈரோடு பேருந்து நிலையம் எதிரில் உள்ள அரசன் கண் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உள்ள பேக்கரிக்கு அருகில் வரவும், தாங்கள் நகையை எடுத்துக்கொண்டு அங்கு வருகிறோம் என்று கூறி நய வஞ்சகமாக பேசி மனுதாரருக்கு அழைப்பு விடுத்துள்ளனர். மனுதாரரும் அவர்களின் பேச்சை நம்பி ஏற்பாடு செய்த ரூ.60,000/- பணத்தை எடுத்துக்கொண்டு, தனது நண்பருடன் சென்று அவர்கள் கூறிய இடத்தில் நின்று கொண்டு, 1 முதல் 3 எதிரிகளுக்கு போன் செய்து நீங்கள் கூறிய இடத்துக்கு

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:45:46 +0530

வந்துவிட்டேன் என்று கூற, 1 முதல் 3 எதிரிகள் சரி இதோ வந்து கொண்டு இருக்கிறோம், கொஞ்சம் காத்திருங்கள் என்று கூறிவிட்டு, சிறிது நேரத்தில் 1 முதல் 3 எதிரிகளும் அவர்கள் சொன்ன இடத்திற்கு அவசர அவசரமாக வந்து கொஞ்சம் அவசரம், அங்கு ஒரு சில ஏழை மக்கள் சிலருக்கு மருத்துவ பரிசோதனை நடைபெற்று வருகிறது, அவசரமாக போக வேண்டும் என்று நடித்து, பொய்யாக ஒரு கதை கூறி மனுதாரரை நம்ப வைத்து இதில் நகை இருக்கிறது என்று ஒரு சிறிய பையை காண்பித்து மனுதாரரை நம்ப வைத்து, அதில் இருந்து நகை என்று கூறிய பொருட்களை வெளியே எடுத்து, அதை ஒரிஜினல் நகையாக பாவித்து காட்டி, அவசர அவசரமாக மனுதாரரிடமிருந்து பணம் ரூ.60,000/–த்தை பெற்றுக்கொண்டு, கொஞ்சம் அவசரம் மற்றதை போனில் பேசுகிறோம் என்று கூறி விட்டு சென்று விட்டனர்.

இதனால் மனுதாரர் அதிக குழப்பத்துடன் அவர்கள் கொடுத்த அந்த நகையை சோதனை செய்து பார்த்த போது, அது உண்மையான தங்க நகைகள் இல்லை, போலியான நகைகள் என்பதை கண்டறிந்து, 1 முதல் 3 எதிரிகளுக்கு போன் செய்த போது, 1 முதல் 3 எதிரிகளும் மனுதாரரின் அழைப்பை ஏற்காமல் இருந்து வந்துள்ளனர் பின்னிட்டு, அடுத்த நாளில் இருந்து 1 முதல் 3 எதிரிகளின் செல்போன் எண்கள் சுவிட்ச் ஆப் செய்து வைத்து விட்டு தலைமறைவாக சென்று விட்டனர்.

இந்நிலையில் மனுதாரர் 1 முதல் 3 எதிரிகளை பற்றி தனக்கு தெரிந்தவர்களிடமும், அவர்களின் பகுதியிலும் சென்று தெரிந்தவர்களிடம் விசாரிக்க, மேற்படி நபர்களும் அவ்வாறு அவர்கள் எந்த ஒரு சமூக சேவையிலும் ஈடுபடுவதில்லை, பல நபர்களை ஏமாற்றி பணம் பறிப்பதையே வழக்கமாக கொண்டு இருந்து வந்துள்ளனர் என்று பலரும் கூறியுள்ளனர். இதனால், மனுதாரர் ஏமாற்றப்பட்டதால் கடந்த 21.08.2025 அன்று இந்த குற்றம் சம்பந்தமாக ஈரோடு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் மனுதாரர் புகாரை பதிவு தபாலில் அனுப்பினார். அந்த புகாரானது மாவட்ட காவல்துறையால் 24.08.2025 அன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. பின்னிட்டு மனுதாரர் கொடுத்த புகாரின் மீதும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

மேலும், கடந்த 18.07.2025 அன்று ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்றுக்கொண்டு விசாரித்த காவல் துறையினர் மேற்படி

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:45:51 +0530

நபர்களுக்கு போன் செய்து விசாரணைக்கு வருமாறு அழைத்தார். 1 முதல் 3 எதிரிகளும் விசாரணைக்கு வருவதாக கூறியதாக காவல் அதிகாரி மனுதாரரிடம் கூறியுள்ளார், பின்னிட்டு பல நாட்கள் ஆகியும், மனுதாரரின் புகாரின் பேரில் எவ்வித மேல்நடவடிக்கைகளும் காவல் துறையினர் எடுக்கவில்லை என்றும், பின்னிட்டு, மனுதாரருக்கு எவ்வித தகவலும் தெரிவிக்காமலும், எதிர்மனுதாரர்களை அழைத்து விசாரிக்காமலும் காவல்துறை செயல்பட்டு வருவதால், மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய நீதியும், நியாயமுமான தக்க பரிகாரம் கிடைக்காமல் மனுதாரர் இம்மனுவை மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறார்.

மேற்படி சம்பவமானது ஈரோடு மாவட்டம், ஈரோடு வடக்கு காவல்நிலைய எல்லைக்குட்பட்டதால் கனம் நீதிமன்றத்தில் இந்த பிராது மனுவினை, எதிர்மனுதாரர்கள் மீது மனுதாரர் சமர்ப்பிக்கிறார் என்றும், சமூகம் நீதிமன்றத்தார் அவர்கள் கிருபை செய்து மனுதாரரின் இப்புகார் மனுவினை ஏற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்கள், ஈரோடு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கும், வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களுக்கும், மனுதாரரின் இந்த புகார் மனு மீது பாரதீய நியாய சன்ஹிதா சட்டப்பிரிவுகள் 61(2), 264, 265, 266, 267, 316 மற்றும் 318 – ன் படியும், இன்னும் தகுந்த சட்டப்பிரிவுகளின் கீழும், 1 முதல் 3 எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், புலன் விசாரணை செய்தும் இறுதி அறிக்கை சமர்பிக்குமாறும், நீதியின் நலன் கருதி இன்னும் பிற உத்தரவுகள் சரியானது என தோன்றுவனவைகளுக்கும் சட்டரீதியான உத்தரவுகள் வழங்கி 1 முதல் 3 வரை உள்ள எதிரிகள் மீதும் எதிரிகளின் செயல்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு இந்த தனிப்புகார் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>II. பிரச்சனை :</u>**

இம்மனு சட்டப்படி அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

**<u>III. பிரச்சனைக்கான தீர்வு :</u>**

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு தொடர்பாக ஈரோடு வடக்கு

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:45:56 +0530

காவல்நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு அறிவிப்பு அனுப்பி போலீசார் தரப்பு சமர்ப்பிப்புகளை தெரிவிக்க போதிய வாய்ப்பு வழங்கப்பட்டபோதும், எந்தவிதமான பதிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆவணங்கள் பரிசீலனைசெய்யப்பட்டது. மனுதாரர் சமூக சேவையில் ஈடுபட்டு வந்துள்ளதால், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தாங்களும் சமூக சேவைகள் செய்து மக்களுக்கு நல்லது செய்து உதவி செய்து வருவதாக கூறி மனுதாரரிடம் அறிமுகமாகி அவ்வப்போது தொடர்பு கொண்டு அடிக்கடி பேசி வந்தார்கள் என்றும், இந்நிலையில் கடந்த மே, ஜுன் மாதங்களிலிருந்தே 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மனுதாரரை அணுகி அதிக தங்க நகைகள் இருப்பதாகவும், அதை குறைந்த விலைக்கு தருவதாக கூறியதற்கு மனுதாரர் மறுப்பு தெரிவித்துள்ளார். இந்நிலையில், கடந்த 01.07.2025 அன்று 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மனுதாரரை அணுகி ஏழை மக்களுக்கு சில அத்தியாவசிய பொருட்கள் வாங்க பணம் அவசரமாக தேவைப்படுவதாகவும், தங்களிடம் பணம் உள்ளது ஆனால் போதவில்லை என்றும், அதில் ரூ.60,000/– குறைவாக உள்ளது என்றும், பணம் கிடைக்குமா என்றும் கோரி பணம் கேட்டதற்கு மனுதாரர் பணம் இல்லை என்று கூறி மறுத்ததற்கு, 1 முதல் 3 வரையிலான எதிரிகள் தங்களிடம் 2 மோதிரம் உள்ளது, அது 1 ½ பவுன் ஆகும் என்றும், அதன் தற்போதைய மார்கெட் விலை ரூ.1,00,000/– என்றும், அதை வைத்துக்கொண்டு ரூ.60,000/– மட்டும் கொடுங்கள் போதும் என்று வஞ்சகமாக பேசியதனால், கடந்த 03.07.2025 அன்று மாலை 6 மணி சுமாருக்கு ஈரோடு பேருந்து நிலையம் எதிரில் உள்ள அரசன் கண் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உள்ள பேக்கரிக்கு அருகில் வைத்து எதிரிகள் போலியான நகைகளை கொடுத்து ரூ.60,000/– பணத்தை பெற்றுக்கொண்டு, செல்போனையும் சுவிட்ச் ஆப் செய்து வைத்து விட்டு தலைமறைவாகியுள்ளனர். எனவே மனுதாரர் 1 முதல் 3 எதிரிகளை பற்றி தனக்கு தெரிந்தவர்களிடமும், அவர்களின் பகுதியிலும் சென்று தெரிந்தவர்களிடம் விசாரிக்க, மேற்படி நபர்களும் அவ்வாறு அவர்கள் எந்த ஒரு சமூக சேவையிலும் ஈடுபடுவதில்லை, பல நபர்களை ஏமாற்றி பணம் பறிப்பதையே வழக்கமாக கொண்டு இருந்து வந்துள்ளனர் என்று பலரும் கூறியதால், ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் ஈரோடு வடக்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மீது பாரதீய நியாய சன்ஹிதா

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:46:02 +0530

சட்டப்பிரிவுகள் 61(2), 264, 265, 266, 267, 316 மற்றும் 318 – ன் படியும், இன்னும் தகுந்த சட்டப்பிரிவுகளின் கீழும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், புலன் விசாரணை செய்தும் இறுதி அறிக்கை சமர்பிக்குமாறும் ஈரோடு வடக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வழக்கு ஆவணங்களை பரிசீலித்து பார்க்கும்போது, மனுதாரர் எதிரிகளிடம் பணத்தை கொடுத்ததற்கும், நகையை பெற்று கொண்டதற்கும் ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் என்ன என்ன நகைகளை எதிரிகள் மனுதாரரிடம் கொடுத்தார் என்பதும், அதை எவ்வாறு சோதனை செய்து உண்மையான தங்க நகைகள் இல்லை என்று கண்டறியப்பட்டது என்பதும் மனுவில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. ஆகவே மனுசங்கதிகளின் படி முதல்நோக்கில் புலன்கொள்ளத்தக்க குற்றங்கள் புரியப்பட்டுள்ளதா இல்லையா என்பது குறித்தும், 1 முதல் 3 வரையிலான எதிரிகள் புகார்தாரருக்கு சொந்தமான பணம் ரூ.60,000/– பெற்றுக்கொண்டு, போலியான நகைகளை கொடுத்துவிட்டு ஏமாற்றிவிட்டார்களா என்பது குறித்தும் முழுமையான முதற்கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டால் தான் உண்மை சங்கதிகள் தெரியவரும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின்படி புலன்கொள்ளத்தக்க குற்றச்சாட்டுகள் புரியப்பட்டுள்ளதா இல்லையா என்பதை குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Lalitha Kumari Vs Union of India என்ற முன்தீர்ப்பில் வழங்கியுள்ள அறிவுறுத்தள்களின்படி மனு சங்கதிகளை பொறுத்து முழுமையான முதற்கட்ட விசாரணை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கின்றது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து ஈரோடு வடக்கு காவல்நிலைய காவல் ஆய்வாளர் விசாரணை செய்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் Lalitha Kumari Vs Union of India என்ற முன்தீர்ப்பில் வகுத்துரைத்த சட்டநிலைகளின் படி முதற்கட்ட விசாரணையை மேற்கொண்டு புலன்கொள்ளத்தக்க குற்றம் புரியபட்டிருப்பது தெரியவரும் பட்சத்தில் உடனடியாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும்,

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:46:07 +0530

முதற்கட்ட விசாரணையில் புலன்கொள்ளத்தக்க குற்றம் புரியப்பட்டிருக்கவில்லை என தெரியவந்தால் அதுசம்மந்தமாக மனுதாரருக்கு சட்டப்படி அறிவிப்பு அனுப்பி அதற்கான அறிக்கையை ஒருமாத காலத்திற்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருகெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரி செய்யப்பட்டு இன்று, 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18–ம் நாள் சனிக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.04.18 17:46:11 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு